12

சின்னம்

ஆளோடியில் ஆள் நிற்பது போலவும் இருந்தது. இல்லாதது போலவும் இருந்தது. தெரு வாசலில் இருந்த வெளிச்சம் நாலு படியேறி சின்ன ரேழியைத் தாண்டி ஆளோடிக்கு வராது. இந்த வீட்டைக் கட்டின நாளிலிருந்து வந்ததில்லை. கையிலே விளக்கைத் தூக்கிக் கொண்டு போகணும், ஆளுடைய முகத்தைப் பார்க்க. அதாவது இந்த எலெக்ட்ரிக் விளக்கு வர்ற வரைக்கும் அப்படித்தான். சாமி அறையிலே இதுக்குன்னு எப்பவும் ஒரு சின்ன சிம்னி விளக்கு இருக்கும். ஆளோடியைத் தாண்டி முதல் கட்டு முற்றத்துக்கு வந்த பிறகுதான் முழுசா ஆளு கண்ணுலே படும். இப்ப ஆளோடியிலே யாரோ நிக்கிற மாதிரி இருக்கு நிச்சயமா.

சௌந்தரி அம்மாள் சாய்வு நாற்காலியில் முதுகு வளைந்திருக்க தலையை மட்டும் முன்னால் நகர்த்தி,

''யார் அது?'' என்றாள்.

சொல்லாமல் கொள்ளாமல் கண்டவர்களும் இங்கு வந்து நின்று விடமாட்டார்கள். சௌந்தரி அம்மாளுடைய வாசலை மிதிக்கவும் தகுதி வேணும். யாராக இருக்கும் இது? செல்லப்பாவோ? அவனாக இருந்தா ஆளோடியிலே ஏன் நிக்கறான்? செருப்பைக் கழட்டிப்புட்டு கிடுகிடுன்னு உள்ளார வந்திருப்பானே? சௌந்தரி அம்மாள்

சிரமப்பட்டு சேலைத் தலைப்பை இழுத்துத் தோளைப் போர்த்திக் கொண்டாள். ரவிக்கை போட்டுகல்லலே. வர வர ரவிக்கைக்குள்ளே கையை நுழைக்கறதுக்குள்ளே உசிரு போவுது. ரவிக்கையெல்லாம் இடையிலே வந்ததுதானே? யாராவது மெட்ராசிலேந்து பார்க்க வந்தா சபாபதியுடைய சம்சாரம் கற்பகத்தையோ அவன் மக மல்லி காவையோ போட்டுவிடச் சொல்றது வழக்கம். இப்ப ஆளோடியிலே யாரோ நிக்கற மாதிரி இல்ல இருக்கு. இப்படி திடுதிப்புனு வெளி ஆள் வந்து நின்னா என்ன செய்ய்?

அடி கற்பகம், மல்லிகா - யாரோ நிக்கறாப்புலே இருக்கு பாருங்கடி. செளந்தரியம்மாளுக்கு லேசாகப் பதைத்தது. வாயி லிருந்து வார்த்தைகளே வரவில்லை என்று புரிந்தது. என்னது இது, குரலே வரல்லே? மல்லிகா, கற்பகம், சபாபதி.

அட்சர அட்சரமாக நாபியிலிருந்து எழுந்து தொண்டைக் குழி வரை வந்த வார்த்தைகள் நெஞ்சுக்குள்ளேயே புதைந்து போயின. வெண்கலக் குரல், கிண்கிணிக் குரல், சண்டமாருதக் குரல் என்று அண்ட சராசரமெல்லாம் புகழ்ந்த குரல் - என்ன ஆச்சு அதுக்கு? செளந்தரி அம்மாள் பரிதவிப்புடன் மறுபடி மறுபடி அட்சரங்களைக் கோர்த்தாள், சப்தம் வரவில்லை.

ஆளோடியில் யாரோ - சட்டென்று பொறி தட்டிற்று. மெல்ல மெல்ல வட்டமாக வெளிச்சம் பரவிற்று. திரையைத் தூக்கினதும் பரவற மாதிரி. அட, நம்ம தனம். பனாரஸ் பட்டும் வைர புல்லாக்கு மாய் - பாதங்களை இணைந்து நின்று கைகளை மட்டும் நீட்டி முகம் குழைந்து இறைஞ்சி - வருக - லாமோ - ஆட -வும் பாட - வும் - ணங் ணங் என்று ஜால்ரா ஒலியுடன் பாட்டு இழைந்து இழைந்து பின்னாலிருந்து பாய்ந்தது. தேகமே உருகிப் போயிற்று. கண்கள் பனித்து ரசனையுடன் தலையும் கைகளும் அசைந்தன.

நாபியிலிருந்து பகபகவென்று அட்சரங்கள் கிளம்பி கண்டத்திலிருந்து வெளிப்பட்டன.

வருக - லாமோ -

உந்தன் அருகில் நின்று

கொண்டாட - வும் பாட - வும்

வருக - லாமோ -

மெய்மறந்து போயிற்று. தெய்வ சன்னிதானம் என்கிறது வேற உண்டா? ஆடு, ஆடு தனம், நிறுத்தாதே. எத்தனை வருஷமாச்சு உன் ஆட்டத்தைப் பாத்து? கண்களை மறைத்த நீரைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்தபோது, ஆளோடியில் தனத்தைக் காணோம். ஏதோதோ நிழலுருவங்களாகத் தெரிந்தன.

''கடைத் தெருவிலே ஒரே கூட்டங்க்கா. அதான் நேரமா யிட்டது'' என்றாள் முற்றத்து வெளிச்சத்துள் நுழைந்த கற்பகம். பொட்டென்று மண்டையில் இடித்தாற் போலிருந்தது. சரசரவென்று சொல்லத் தெரியாத ஏமாற்றம் நெஞ்சைக் கவ்விற்று.

''யாராவது என்னைத் தேடிக்கிட்டு வந்தாங்களாக்கா?'' என்றான் சபாபதி.

''உன்னைத் தேடிட்டு வரல்லே.''

''உன்னைப் பார்க்க வந்தாங்களா? செல்லப்பா வந்தானா?''

''இல்லே இல்லே.''

சௌந்தரிக்குக் குழப்பமாக இருந்தது.

''என்னக்கா?''

''ஒன்றும் இல்லே. கனாக் கண்டேன் போலிருக்கு.''

''கனாவா?''

சௌந்தரிக்கு மெல்லச் சிரிப்பு வந்தது. ''ஆமாம், நிஜம் போல. கனாவிலே யாரு வந்ததுங்கறே? தனம் நிக்கறா. பனாரஸ் பட்டுச்

சேலையும் வைர புல்லாக்குமா! அன்னி மேனிக்கு. எனக்கு ஆடிக் கூடக் காண்பிச்சா. வருக - லாமோன்னு பாவம் புடிச்சா பாரு. அட அட, ஆட்டம்னா அது இல்ல ஆட்டம்!''

சபாபதி கற்பகத்தைப் பார்த்துச் சிரித்தாள்.

''கற்பகம், கொஞ்சம் காபி கலந்து கொண்டா. அந்தக் கீரையை வேணா இப்படி கொண்டாந்து வை. நானும் அக்காவும் ஆஞ்சு வெக்கறோம்.''

சௌந்தரியம்மாள் பிரமை தீராமல் ஆளோடியைப் பார்த்தாள். கும்மிருட்டாக இருந்தது.

கண்டது கனாதானா?

''இந்தாங்க காபி'' என்று கற்பகம் நீட்டியதும், கீரைக் கட்டை முறத்தில் விரித்து எதிரில் வைத்ததும் கூட கனவில் நடப்பது போலிருந்தன. ஆனால் தனத்தின் ஆட்டத்தைக் கண்டு ஏற்பட்ட லாகிரி சத்தியம் என்று தோன்றிற்று. அவ நின்னதும், முத்திரை காண்பிச்சதும், கண்ணுலே தேங்கின உருக்கமும் அட அட, அதைக் கனான்னு எப்படிச் சொல்றது? உடல் முழுவதும் பரவிய சிலிர்ப்பு இன்னும் இருந்தது. அடி மனத்திலிருந்து அலை அலையாக சங்கதிகள் விரிந்து கோர்வைகளாய் இறக்கை கட்டிக்கொண்டு எழுந்தன.

வருக - லாமோ - ஐய் - ய்ய -

''என்னக்கா, இன்னும் தனம் நிக்கிறாளா?''

கீரையை ஆய்ந்தபடி ஆளோடியில் பதித்திருந்த பார்வையைத் திருப்பி சௌந்திரியம்மாள் சிரித்தாள். சபாபதி தலையைக் குனிந்து கொண்டு கீரையை சிரத்தையாகக் கத்தியால் பொடிப் பொடியாக நறுக்கிக் கொண்டிருந்தான். தனத்தின் ஆட்டத்தைப் பற்றி இன்னும் ஏதோ உற்சாகமாகச் சொல்ல நினைத்த சௌந்தரி மௌனமானாள். சபாபதி மாறிப்போனது ஆச்சரியமாயிருக்கு. எட்டு வயசிலே இவன்

மிருதங்கத்திலே காண்பிச்ச தீர்மானங்கள் அசத்தலா இருக்கும். அன்னிக்கு இருந்த எல்லா வித்வான்களையும் சாப்பிட்டுருவான்னு பெருமையாயிருக்கும். பிடிவாதமா அவனைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பிச்சு அப்பாதான் அவன் சங்கீதத்தைக் கொலை செஞ்சது. கிளார்க் உத்தியோகம்; நாற்பது வயசுக்கு மேல கல்யாணம்; டீச்சர் பெண்சாதி, கௌரவம், மரியாதை, லொட்டு லொசுக்கு இதெல்லாம் தான் தீர்மானமா போச்சு இப்ப. ரத்தமே மாறிட்ட மாதிரி இருக்கு.

''அவங்க இறந்து பத்து வருஷம் ஆயிருக்குமில்லே?''

''யாரு?''

''அதான்க்கா தனம்.''

''ஊம், மேலயே இருக்கும். தபஸ்வி மாதிரின்னா கடைசியிலே இருந்தா.''

சபாபதி தலையை நிமிர்த்தாமல் கீரை நறுக்குவதில் மும்முரமாயிருந்தான்.

''ஆமாம், கேள்விப்பட்டிருக்கேன்.''

''ரங்கோன் சுந்தரம்னு பேரு. தனத்து நாட்டியத்திலே சொக்கி தங்கமும் வைரமுமா இழைச்சாரு. ரங்கூன்லே அவருக்குப் பெரிய நஷ்டமாயி கடைசியிலே சாப்பாட்டுக்கே லாட்டரி அடிக்கறார்னு கேள்விப்பட்டா பாத்துக்க; இந்த தனம், அவ்வளவு நகை நட்டு, அவர் கொடுத்த வெள்ளிப் பாத்திரம் அத்தனையும் மூட்டையா கட்டி, கொண்டு போய் கொடுத்துட்டா. சுந்தரத்தோட பெண்டாட்டி இவ கால்லேயே விழுந்துட்டாளாம் திகைச்சுப் போய்.''

''அப்படியும் இருந்திருக்காங்க.''

''பின்னே? ஞானம்டா சபாபதி. ஞானம் இருக்கிற இடத்திலே குணம் இருக்கும்.''

''கீரையை ஆஞ்சு நறுக்கியாச்சா?'' கற்பகத்தின் குரல் உயர்ந்து கேட்டது. ''மல்லிகாவும் செந்திலும் வந்துருவாங்க சாப்பாட்டுக்கு.''

சௌந்தரி மௌனமானாள். பேசியது போதும் என்கிற கற்பகத்தின் சமிக்ஞை அது.

''நறுக்கியாச்சு, எடுத்திட்டுப் போ'' என்றான் சபாபதி.

மெட்டி சப்தம் ஒலிக்க கற்பகம் வந்து நின்று கீரையை அள்ளக் குனிந்த போது தாலிச்சரடு ஊஞ்சல் போல் முன்னும் பின்னும் அசைந்தது.

''கீரையை மசிச்சு கத்திரிக்காய் காரக்குழம்பு பண்ணட்டு மாக்கா?''

கற்பகத்தின் குரல் சமாதானமாகக் குழைந்தது.

''பண்ணு பண்ணு. மல்லிகாவுக்கும் செந்திலுக்கும் பிடிக்கு மான்னு பார்த்துக்க.''

''அவங்களுக்குத் தனியா உருளைக்கிழங்கு ரோஸ்ட் செய்யறேனே?''

இப்படியே பேசிக் கொண்டிருந்தால் கற்பகத்துக்குத் திருப்தியோ இல்லையோ, நிம்மதி நிச்சயம் என்ற சௌந்தரிக்குத் தெரியும். இன்னும் ஏன் இப்படி பயந்து சாகறாங்க? பூதங்களைக் கண்டு இதுங்களுக்கு பயம். தங்க நிழலைக் கண்டே பயம். என் வாயிலேந்து வர்ற வார்த்தை எல்லாம் பூதமாப்படுது. எனக்கு மட்டும் பென்ஷன் வரல்லேன்னா நடுத்தெருவுக்கு இந்தக் கற்பகம் என்னிக்கோ விரட்டியிருப்பா.

கீரை ஆயும் வேலை முடிந்ததால் சௌந்தரி சாய்வு நாற் காலியில் சாய்ந்து அமர்ந்து கொண்டாள்.

கூடத்துச் சுவர்களில் ஆள் உயரத்துக்கு மேல் சுவர் தெரியாமல் சட்டம் போட்ட புகைப்படங்கள். மங்கிப் போன கருப்பு வெள்ளைப் படங்கள். தம்பிடி அளவு குங்குமப் பொட்டும் வைரக் கம்மலும் வைர பேசரியும் வாய் நிறைய சிரிப்புமாக சௌந்தரி. திருவிதாங்கூரி லிருந்து பரோடா வரை பிரமுகர்களிடமிருந்தும் மந்திரிகளிடம் இருந்தும் விருது பெற்ற சாட்சியங்கள். சங்கீத பூஷணி, கான சௌந்தரி, கான சரஸ்வதி, கலைமாமணி - இன்னும் என் னென்னவோ, ஞாபகம் கூட இல்லை. ஆனா உயிர் மூச்சா இருந்த சங்கீதத்தை மறந்துட முடியுமா? இடுகாட்டுக்குப் போற நேரம் வந்தாச்சு. ஆனாலும் சங்கீதத்தைக் கேட்டா நாடி நரம்பெல்லாம் உசுப்பி விட்டுடுதே? சங்கீதம் என்கிற சொல்லும் சௌந்தரியம்மாள் என்கிற பெயரும் வேறு வேறு இல்லேன்னு ஹைதராபாதிலே ஒரு மந்திரி சொன்னாரு. அதோ அந்த வலது கோடியிலே அந்த போட்டோ இருக்கு. உண்மையைத்தான் சொன்னங்க அந்த ஐயா. வர்ற பென் ஷனை மாத்திரம் வாங்கி வெச்சிக்கிறாங்களே, இதெல்லாம் எப்படி இவங்களுக்கு மறந்து போவுது? பாவி முண்டைங்களுக்கு நா வெறும் அடையாளமா இல்லே ஆயிட்டேன்? சௌந்தரி கண்களை ஆயாசத்துடன் மூடிக் கொண்டாள். மனசு மெல்ல நிதானத்துக்கு வந்தது. இவங்கைச் சொல்லிக் குத்தமில்லே. ஆனா நா உசிரோட இருக்கற வரைக்கும் என் உள் மனசை மாத்த முடியாது. நீ காரக் குழம்பு பண்ணு, இல்லே, மசியலைப் பண்ணு. என்னோட லயிப்பு வேற.

''அந்த ரேடியோவை கொஞ்சம் வையேண்டா சபாபதி. இப்ப சங்கீதம் வருமில்லே?''

கொஞ்ச நேரம் ஒரே இரைச்சலா இருந்து கடைசியில் பாட்டு கேட்டது.

தே......வி நீயே துணை-

தென்மதுரை வாழ் மீன லோசனி-

சட்டென்று எல்லா ஜடப் பொருள்களும் ஜட எண்ணங்களும் விடைபெற்றன. சௌந்தரி வேறு உலகத்தில் இருந்தாள். ராக மேகங்களில் அமர்ந்து கொண்டு தெய்வ சன்னிதிக்குப் போய் சேர்ந்தாள்.

''தே.....வி!''

ஐயே, இதென்ன இந்தப் பொம்பளை இத்தோடு நிறுத்திட்டா. இன்னும் எத்தனை சங்கதி பாடலாம் - இப்பல்லாம் சங்கதி பாடறதே கொறைஞ்சு போச்சு. சோம்பேறித்தனமா அது என்னான்னே புரியல்லே. செல்லப்பாண்ட சொல்லணும்.

''என்னடா சபாபதி, பாட்டை நிறுத்திட்டியா?''

''நாதான் நிறுத்தினேன் அத்தே'' என்றான் செந்தில், ''பாட்டு நல்லாவே இல்லையே?''

''சங்கதி இல்லையே தவிர பாட்டு மோசமில்லே. உனக்குத்தான் எங்க பாட்டெல்லாம் புடிக்க மாட்டேங்குது.''

''அதனாலே இல்லை. யாரோ வந்திருக்காங்க.''

''யாரு?''

''யாரு கண்டாங்க? அப்பா உபசாரம் பண்ணி பேசிக்கிட்டிருக் காங்க.''

இந்தப் புள்ளைக்கு ஏன் இப்படிக் கோவம் வருது?

''சரிதான் உள்ளே வந்து சாப்பிடு. பசி வேளையிலே உனக்கு எல்லாத்துக்கும் கோபம் வரும்'' என்று கற்பகம் மெல்லிய குரலில் அதட்டினாள்.

''யார்ரா அது சபாபதி?''

''யாரோ மெட்ராசிலேந்து வந்திருக்காங்க. பத்திரிகைக்குப் பேட்டி எடுக்கணுமாம்.''

''யாரை?''

''உன்னைத்தான்.''

''என்னையா?''

யாரு என்னன்னு கேட்டுக்கறதுக்குள்ளே கிடுகிடுன்னு செந்தில் வந்து நிக்கறான்.

''அத்தே, பேட்டி கீட்டி எதும் கொடுக்க வேணாம்.''

ஒரு விநாடி 'திக்'குனு போச்சு. அந்த முகமும் கண்ணுலே இருந்த தீவிரமும் வேற என்னென்னத்தியோ ஞாபகத்துக்குக் கொண்டு வந்தது. இந்தப் பயலுக்கு இருபத்திரெண்டு வயசு தான் னாலும் இந்தக் கோபம் ரொம்பப் பழசு.

முற்றத்தில் வந்து புன்னகையுடன் நின்று கைகுவித்து நமஸ்கரித்த அந்தப் பெண்ணைப் பார்த்ததும் ஜனன தொடர்பு இருந்தது போல ''வாங்க'' என்றாள் சௌந்தரி அம்மாள் செந்திலைக் கவனிக்காமல்.

* * * * *

கண்ணில் பூச்சி பறப்பது போலிருந்தது செல்லப்பாவுக்கு. இரண்டு மணி நேரமாக குனிந்து கிட்டத்தட்ட பொடிப் பொடியாக உதிர ஆரம்பித்திருந்த அந்தப் புத்தகப் பக்கங்களை வரி விடாமல் ஆராய்ந்ததில் கழுத்தெல்லாம் வலித்தது. லைப்ரரியில் சரியான மின் விசிறி கூட இல்லை. அது போடும் சத்தத்தில் படித்து கிரகித்துக் கொள்ள செல்லப்பாவுக்கு மட்டுமே முடியும்.

இன்னிக்கு இதோட போறும். செல்லப்பா புத்தகத்தை சர்வ ஜாக்கிரதையாக மடித்து அலமாரிக்குள் வைத்து விட்டு 'போயிட்டு வரேன்' என்று வீட்டு மனிதர்களிடம் சொல்லிக் கொண்டு கிளம்புவது போல லைப்ரேரியன் சந்தானத்திடம் சொல்லிக் கொண்டு கிளம்பினான்.

''உனக்காகவே இந்த லைப்ரரி திறந்து வைக்கிற மாதிரி இருக்கு'' என்றார் சந்தானம்.

''படிக்கணும்ங்கற வழக்கமே நம்ம ஜனங்களுக்கு இல்லை. லைப்ரரிக்கு வந்துண்டிருந்தவாளும் இப்ப டி.வி. முன்னாடி உக்காந்துடறா.''

வெற்றிலைச் சாற்றைத் துப்பும் சாக்கில் செல்லப்பா வெளியேற முனைந்தான். சந்தானம் இப்போதைக்கு ஓயமாட்டார். சொந்த பொக்கிஷம் விரயமாவதைப் போல் அவர் பரிதவிப்பதைப் பார்க்க சங்கடமாக இருக்கும்.

''ஆனா உன்னை மாதிரி நாலு பேர் இருந்தா போதும், செல்லப்பா'' என்றார் சந்தானம் தன்னையே சமாதானப்படுத்திக் கொள்பவர் போல.

''உங்கப்பா உன்னைப் பெரிய அறிவாளியாக்கணும்னு கனாக்கண்டதுக்கு - இன்னிக்குக் காலேஜ் ப்ரொஃபசரா-'' மேற் கொண்டு அவர் சொல்லப் போவதை கேட்கக் கூச்சப்பட்டுக் கொண்டு லேசாகப் புன்னகைத்துத் தலை அசைத்து செல்லப்பா வெளியே வந்தான்.

சந்தானம் இதே வார்த்தைகளை எத்தனையோ முறை சொல்லியிருக்கிறார். ஆனால் அதைக் கேட்கும்போதெல்லாம் உடம்பு சிலிர்க்கிறது. அவனைப் பார்க்கும் போதெல்லாம் அவருக்கு இதே சிந்தனை ஏற்படுவது உறுத்தலாகவும் இருந்தது. ஒரு மெல்லிய அவமான உணர்வு ஏற்பட்டது.

வீட்டை நோக்கி நடக்கும்போது அது தொடர்ந்து கூடவே வந்தது. இந்தத் தெருக்களில் அப்பா சட்டை அணிந்து கொண்டோ செருப்பு போட்டுக் கொண்டோ சென்றதில்லை. அப்பா ஆஜானு பாகுவாக இருப்பார். கடைக்குட்டியான அவன் அவர் நடக்கும்போது அவரை எட்டிப்பிடிக்க பொடி ஓட்டம் போட வேணும்.

மேட்டுத் தெரு மிராசு வீட்டிலிருந்து ஆள் வந்ததென்றால் அப்படி ஒரு வேக நடை போடுவார் அப்பா. நாலுகட்டு வீட்டின் முன் தாழ்வாரத்தில் சிமெண்டுத் தரையில் காலை நெம்பி நெம்பி வெள்ளிப் பூண் போட்ட ஊஞ்சலில் ஆடிக் கொண்டிருக்கும் மிராசு, அப்பாவைப் பார்த்ததும் ஆட்டத்தை நிறுத்துவார். ஆஜானுபாகு உடம்பு குறுகும். முதுகு கூனும்.

''கூப்பிட்டிங்களா சாமி?''

அப்பா நிற்கும் விதத்தைப் பார்த்தால் உஞ்சலில் உட்கார்ந் திருப்பது சாமிதான் என்று செல்லப்பாவுக்குத் தோன்றும். வெள்ளி வெற்றிலைச் செல்லத்திலிருந்து வெற்றிலையை எடுத்து நரம்பைக் கிள்ளியபடி சாமி சொல்லும்:

''பெண்ணுக்குக் கல்யாணம் நிச்சயமாயிருக்கு. வர்ற தையிலே அஞ்சாறு முஹுர்த்தம் இருக்கு, எந்த தேதி உனக்கு சௌகர்யம் சொல்லு. நீதான் மேளம் வாசிக்கணும்.''

ஏதோ வரம் கிடைத்தது போல் அப்பாவின் முகம் மலரும்.

''நம்ம வீட்டு கல்யாணத்துக்கு வாசிக்காம நா வெறெங்க சாமி வாசிக்கப் போறேன்?''

இருந்தும் கணக்குப்பிள்ளை முஹுர்த்த தேதிகளைச் சொல்ல அப்பா ஒரு தேதியை ''அது சௌகர்யம் சாமி'' என்பார்.

''ரொம்ப சரி. அன்னிக்கே கல்யாணத்தை வெச்சுக்கலாம்.''

கிளம்பும்போது, ''ஜானவாசந்துக்கு சரகுண பாலிம்ப வாசிக் கணும். மறந்துடாதே'' என்று சாமி சொல்லும். அப்பா சந்தோஷமாக வெற்றிலைக் காவிப் பல்லைக் காட்டி சிரிப்பார்.

''கண்டிப்பா சாமி.''

வீட்டுக்குச் செல்லும் வழி நெடுக அப்பா லாகிரியில் மிதப்பார். நடு நடுவில் கூட நடக்கும் பொடியனை ஆசையுடன் பார்த்துப் புன்னகைப்பார். அன்றிலிருந்து தினமும் ஒருமுறை சரகுண பாலிம்ப ஒத்திகை நடக்கும். ஜானவாசத்தின்போது நடுத்தெருவில் நாயனத்தை ஏந்தி நின்று சங்கராபரணத்தையோ மோஹனத்தையோ ஒரு இழுப்பு இழுத்தாரானால் அப்பாவே புவிக்கு ராஜா என்று தோன்றும். ஒத்து நாயனமும் மேளமும் மிராசும் அதன் சம்பந்தியும் தெரு ஜனங்களும் தலையாட்டிக் கிறங்கியிருக்கும் வேளையில் எல்லாருமே அப்பாவுக்கு சேவகர்கள் என்று பிரமை ஏற்படும். செல்லப்பாவுக்குப் பிடிகொள்ளாத பெருமையாக இருக்கும். ஜானவாசம் முடிந்ததும் அல்லது முஹூர்த்தம் முடிந்ததும் அப்பாவும் மேளமும் ஒத்தும் அவனும் தெருக்கோடியில் இருந்த மண்டபத்தில் உட்கார்ந்திருப் பார்கள். வந்தவர்கள் எல்லாம் சாப்பிட்டுப் போய் விடுவார்கள். செல்லப்பா பசியும் தூக்கமுமாய் அப்பாவின் மடியில் தூங்கிப் போவான். கடைசி:யில் ஒரு வாளியில் சாப்பாடு வரும். தோள் மேல் இருந்த துண்டை அப்பா நீட்டி விரிப்பார். வாழையிலையில் சாதமும் கறியும் கூட்டும் பிட்ளையும் மோர்க்குழம்பும் எல்லாம் கலந்து துண்டில் இறங்கும். மண்டபத்திலேயே அமர்ந்து சாப்பிட்டு சாப்பிட்ட இலையை வாய்க்கால் ஓரமாகப் போட்டு வாய் கொப்பளித்து வீடு திரும்பும்போது உடம்பு உடம்பாக இருக்காது.

இப்போது நினைத்துப் பார்க்கும்போது செல்லப்பாவுக்கு ஆச்சரியமாக இருந்தது. அப்பா ஒருநாள் கூடக் குறை சொன்ன தில்லை. ஆனால் அவருக்கு சில தீர்மானங்கள் இருந்தன. அது குறையினால் ஏற்பட்டதா ஆதங்கத்தினால் ஏற்பட்டதா என்று தெரியாது.

வெயில் சுள்ளென்று சுட்டது. புதுசாகக் குடை வாங்க வேண்டும். போன வாரம் வரை இருந்த குடையை, லைப்ரரியில் வைத்திருந்தது, யாரோ தூக்கிக் கொண்டு போய் விட்டார்கள். சந்தானத்திடம், ''என்னைத் தவிர யாரும் லைப்ரரிக்கு வர்றதில்

லேன்னு குறைபட்டுண்டீரே, இன்னொருத்தன் வந்திருக்கான் பாரும் - என் குடையைத் தூக்கிண்டு போயிருக்கான்'' என்றபோது இருவரும் சிரித்தார்கள். வெயில் உறைக்கும் போதுதான் குடையின் அருமையும் அப்பா அனுபவிக்காத பவிஷின் சின்னம் அது என்பதும் நினைவுக்கு வருகின்றன.

கண்ணுக்கு மேல் கையை அண்டக் கொடுத்து செல்லப்பா நடந்தான். நல்லவேளை, காலுக்கு இதமாக செருப்பாவது இருக்கிறது. செருப்பும் ஒரு சின்னம். சட்டையும் அங்க வஸ்திரமும் எல்லாமுமே சின்னங்கள். இவையெல்லாம் மறுக்கப்பட்டதாலேயே தான் அடையாளமில்லாதவன் என்று அப்பா நினைத்தார்.

வடக்கு மாசி வீதியைத் தாண்டும்போதுதான் அந்தப் பெண் கண்ணில் பட்டாள். சென்னை வாசியோ பம்பாய் வாசியோ என்று பட்டது. நிச்சயம் இந்த ஊர் இல்லை. வெயிலுக்கு தலைப்பால் தலையைப் போர்த்தி கருப்புக் கண்ணாடி அணிந்திருந்தாள். செல்லப்பாவைக் கண்டதும் ''எக்ஸ்க்யூஸ் மீ'' என்றாள். ''சௌந்தரி அம்மாள் வீடு எதுன்னு சொல்லமுடியுமா?'' என்றாள்.

''பேஷா'' என்றான் செல்லப்பா. ''இதே தெரு கடைசியிலே ஒரு சவுக்கம் வரும். அதுக்கு இடப்பக்கம் நீளப்போனா கடைசி வீடு.''

''தாங்க்யூ'' என்றாள் அந்தப் பெண் புன்னகையுடன். ''வீட்டிலே இருப்பாங்க இல்லே?''

''இல்லாம எங்கே போவா? எண்பத்திரெண்டு வயசு.''

''தாங்க்ஸ்'' என்றுவிட்டு அந்தப் பெண் அவன் காட்டிய திசையில் நடந்ததும் செல்லப்பா வீட்டை நோக்கி நடந்தான். சௌந் தரி அம்மாளை அத்தை என்றுதான் கூப்பிடுவது. அவளைப் பற்றி நினைத்ததுமே மனசில் சந்தோஷம் பூக்கும். தன்னை அறியாமல் முகம் மலரும், அப்பாவை நினைக்கும் போது ஏற்படுகிற மாதிரி. கிட்டத்தட்ட பல விதங்களில் அத்தைக்கும் அப்பாவுக்கும் வித்தியாச மில்லை என்று தோன்றிற்று.

* * * * *

குடை கொண்டு வந்திருக்க வேண்டும் என்று மந்தாகினி நினைத்துக் கொண்டாள். தெற்கே வெயிலாக இருக்கும் என்று தெரியும். இப்படிப் பொசுக்கும் என்று யாரும் சொல்லவில்லை. கோடைகாலத்தில் ராஜஸ்தான் கக்கும் சூட்டுக்கும் இதற்கும் வித்தியாசமில்லை என்று தோன்றிற்று. தோல் உரிந்த சோகை வெளுப்பில் வெயில் கூசிற்று. ஆனால் வெயிலுக்கும் வண்ணங் களுக்கும் தொடர்பிருந்தது போல கலைக்கும் ஓசைக்கும் லயத்துக்கும் தொடர்பிருந்தது என்று தோன்றிற்று. காமத்துக்கும், காதலுக்கும், வெறிக்கும், அவமானத்துக்கும் தொடர்பிருந்தது போல-

அவளுடைய எண்ணங்களுக்கும் உண்மைக்கும் ஏதும் சம்பந்தமில்லாமல் தெருக்கள் வண்ணத்தையும் ஓசையையும் எங்கோ புதைத்து இழுத்துப் போர்த்திப் படுத்துக் கிடந்தன. மூடிய கதவுகளைத் தட்டிப் பேச வேண்டும் என்றால் யாராவது பேசுவார் களா? ''துரத்தி அடிப்பாங்க'' என்று அம்மா எச்சரித்திருந்தாள். ''உனக்கு வேற விஷயம் இல்லையா எழுத?'' எவ்வளவோ இருந்தன. ஆனால் இது உணர்வோடு கலந்த விஷயம் போல் பட்டது. என்றாவது ஒரு நாள் எழுதியே தீர்க்க வேண்டும் என்ற வெறி அணையாத கனலாய் உள்ளே தகித்தது. யார் பேசினாலும் பேசாவிட்டாலும் பாட்டியுடைய சினேகிதி செளந்தரி அம்மாளைப் பார்த்துவிடவேண்டும்.

தொலைவில் கோயில் கோபுரம் தெரிந்தது. 'அங்கிருந்துதான் எல்லாமே ஜனித்தது' என்றாள் பாட்டி. பாட்டியின் தீட்சண்யம் அம்மாவுக்குக் கிடையாது. வேண்டுமென்றே அம்மா போட்டுக் கொண்ட திரை அது என்று தோன்றும். அம்மா பார்க்கும் டாக்டர் தொழிலுக்கு இதெல்லாம் தேவையில்லாத ஆராய்ச்சி. அம்மா இந்த ஊருக்குக்குக் கூட வந்ததில்லை.

பாட்டி பிறந்த ஊர். இன்று கூட, தங்குவதற்கு ஒரு நல்ல ஓட்டல் வசதி இல்லாத இந்தச் சின்ன ஊரில் ஐம்பது வருஷங்களுக்கு

முன்னால் சரித்திரத்தை மாற்றிய புரட்சி நடந்திருக்கிறது. பாட்டி நடத்திய புரட்சி.

'அது எப்படி சாத்தியமாச்சு பாட்டி' என்று கேட்கும் போதெல்லாம் பாட்டி தூரப் பார்வை பார்ப்பாள். இன்றும் வெண் பட்டு நிறத்தில் மிருதுவாக இருக்கும் முக தசைகள் இறுகிப் போகும்.

''ஒருநாள் நா பிறந்த ஊருக்குப் போய் கிழக்கு மாசித் தெருவுக்குப் போய் ரங்கவிலாஸ்னு ஒரு வீடு இருக்கா பாரு. அந்த வீட்டுக் கொல்லையிலே மாட்டுத் தொழுவத்திலே என்னோட ஆறாவது வயசிலே புரட்சி வெடிச்சது.''

இந்த ஊருக்கு வந்த உடனேயே நேற்று பாட்டி கொடுத்த விலாசத்தைத் தேடிக்கொண்டு போனபோது ரங்கவிலாசம் பூட்டிக் கிடந்தது. பக்கத்து வீட்டுக் கதவைத் தட்டியதும் முகத்தை மட்டும் வெளியே நீட்டிய மாமாவிடம், ''பக்கத்து வீட்லே யாருமில்லே?'' என்றாள் கொச்சைத் தமிழில்.

''இல்லையே'' என்றார் மாமா. ''ரொம்ப வருஷமா அங்கே யாரும் இல்லே. ரங்கமய்யர்னு ஒரு மிராசுதாரோட வீடு. அவருக்குக் குழந்தைகள் கிடையாது.''

''குழந்தைகள் இல்லாம என்னன்னா?'' என்றாள் உள்ளிருந்து வந்த மாமி.

''அவருடைய சம்சாரத்துக்குப் பிறக்கல்லேன்னேன்.''

''எனக்கு அந்த வீட்டைப் பார்க்கணுமே'' என்றாள் மந்தாகினி. ''அந்த வீட்டோட சாவி யார்கிட்ட இருக்கும்?''

''ஏன், வீடு வாங்கணுமா உங்களுக்கு?''

சட்டென்று யோசனையே இல்லாமல் வார்த்தைகள் வந்தன.

''தமிழ்நாட்டுப் பழைய கால வீடுகளைப் பத்தி ஒரு புஸ்தகம் எழுதறேன். இந்த வீடு உள்ளே நன்றாய் இருக்கும் போலிருக்கு.''

''ஆகா. பேஷான வீடு. எல்லாம் தேக்கு. தரையெல்லாம் அந்தக் காலத்திலேயே சலவைக்கல். வாங்கத்தான் மனுஷா இல்லே. சாவி எங்கிட்ட இருக்கு, காண்பிக்கறேன்.''

இது எதிர்பாராத அதிர்ஷ்டமாகப் பட்டது. வாசல் கதவே அருமையான சிற்ப வேலைப்பாட்டுடன் பித்தளை மணிகள் தொங்க இன்னமும் பளபளத்தது. ஓசையுடன் பூட்டு விலக கதவு திறந்தபோது மணிகள் கிண்கிணி கிண்கிணி என்று சப்தித்தன. உள்ளே கால் வைக்கும்போது அடிவயிற்றை என்னவோ செய்தது, யாருடைய அந்தரங்கத்தையோ தேட முற்பட்டது போல. லேசான மக்கிய வாடை அடித்தாலும் வீடு துப்புரவாகவே இருந்தது.

''15 நாளைக்கு ஒரு தடவை கிளீன் பண்ற வழக்கம்'' என்றார் மாமா.

கூடமும் சுவர்களும் நூறு வருஷத்துக்கு முந்தைய சரித்திரம் பேசின. பித்தளைப் பூண் போட்ட தேக்கு மர ஊஞ்சல். இதை உபயோகித்தவரின் பிம்பம் புகை மூட்டமாக மனத்தில் ஆடிய போது ''ரங்கமய்யர் போட்டோ இது'' என்றார் மாமா.

அந்த முகத்துக்கும் அம்மாவுக்கும் இருந்த ஒற்றுமையைக் கண்டு மனசு திடுக்கிட்டது. அதே புருவம், அதே மூக்கு, அதே வாய். சுவர்களிலெல்லாம் என்னென்னவோ புகைப்படங்கள். மந்தாகினி ஆர்வத்துடன் அவற்றில் எதையோ தேடினாள். கடைசியில் ஒன்று கண்ணில் பட்டது. பட்டதாரியாகப் பாட்டி - கருப்பு அங்கியும் கையில் பட்டச் சுருளுமாக. மனத்தில் பிரவாகமாக ஏதோ பொங்கிற்று. அதற்கு அடுத்து பாட்டியும் அவளது சகோதர சகோதரிகளும். அதில் இருந்த தூசியைக் கைக்குட்டையால் துடைத்து,

''யார் இவங்க?'' என்றாள்.

''ரங்கமய்யருடைய குழந்தைகள். அதாவது அவர் வெச்சிருந்த தாசிக்குப் பிறந்த குழந்தைகள்.''

''இங்கதான் வளர்ந்தாங்களா?''

''சேச்சே, யாரையும் படியேற விட்டத்தில்லே. அவர் மகா ஆசாரமாம். தாசி வீட்டுக்குப் போவாரே தவிர ஒரு வாய் தீர்த்தம் அங்கே சாப்பிட மாட்டாராம்.''

மந்தாகினி திரும்பி ரங்கமய்யரின் முகத்தைப் பார்த்தாள். அந்த தாசி இவருக்கு எப்படிக் குழந்தைகளைப் பெற்றாள் என்று ஆச்சரியமாக இருந்தது.

மாமா ஒவ்வொரு அறையாகத் திறந்தார். நாலு கட்டுக் கொண்ட பெரிய வீடு - குழந்தைகள் பாதம் பதியாத மொசைக்குத் தரைகள் - சிரிப்பொலி கேட்காத சுவர்கள். முற்றத்தைச் சுற்றி பிசாசுகள் போல் கருந்தூண்கள் - பின்கட்டு - சமையல் கட்டில் புகைபோக்கி வழியாக பட்டையாக இறங்கிய சூரிய வெளிச்சம் என்னென்னவோ படிமங்களை எழுப்பின.

''தாசி வீட்டுக்கும் இங்கேதான் சமையல். ஆனா யாரும் கொண்டு போய் கொடுக்க மாட்டாங்க. அவளே குழந்தைகளோட கொல்லையிலே வந்து நின்னு எடுத்துண்டு போகணும்.''

''தெரியும்.''

''என்ன?''

''ஒண்ணுமில்லே விசித்திரம்னேன்.''

''விசித்திரமென்ன? அப்பல்லாம் அப்படித்தான். ரங்கமய்யரும் ரொம்ப ஸ்ட்ரிக்ட். தாசி வீட்டிலேந்து வந்ததும் நேர கிணத்தடியிலே ஸ்நானம் பண்ணிட்டு தான் உள்ளே நுழைவார். அவா வீடே கதின்னு கெட்டழிஞ்சு போனவா நிறைய பேர் அந்தக் காலத்திலே. ஆனா இவ

வித்தியாசமாவ. ரங்கமய்யர் கொடுத்த பணத்தை வெச்சு பொண் குழந்தைகளையெல்லாம் வெளியிலே ஹாஸ்டலுக்கு அனுப்பி படிக்க வெச்சா.''

''கொல்லைப் பக்கம் பார்க்கலாம்.''

''அங்கே என்ன இருக்கு? ஒண்ணுமில்லே. இடிஞ்சு போன மாட்டுக் கொட்டில்தான்.''

''பரவாயில்லே.''

''உங்க இஷ்டம்.''

பெரிய கிரீச் சத்தத்துடன் மரக்கதவு திறந்தது. தாறு மாறாக இருந்த கல் படிகளைக் கடந்து கொல்லையில் கால் பதித்த போது மார்பு படபடத்தது. கூரையில்லாத ஒரு இடிந்த மாட்டுக்கொட்டில். சுற்றிலும் புதர் மண்டிக் கிடந்தது. ஒரு மாமரம். அதற்கடியில் அவர்கள் நின்றிருந்தார்கள். சோற்றுக்காக தாசியும் அவளது அஞ்சாறு குழந்தைகளும். அப்போதுதான் ஆறு வயசுப் பெண் மனசில் புயல் வீசியிருக்க வேண்டும். புரட்சி வெடித்திருக்க வேண்டும் - பெற்றவள் மனசில்.

மந்தாகினி தெருவின் பெயரை எழுத்துக் கூட்டி வாசித்தாள். வடக்கு மாசி வீதி. சௌந்தரி அம்மாள் வீட்டைப் பற்றி யார் சொல்வார்கள்?

எதிரே ஒரு ஆள் வருவது தெரிந்தது. குடையில்லாததால் வெயிலில் கூசும் கண்களுக்கு மேல் வலது புறங்கையைக் கவிழ்த்தபடி வந்தவரிடம் ''சௌந்தரி அம்மாள் வீடு எங்கேன்னு சொல்ல முடியுமா?'' என்றாள்.

* * * * *

இன்று மாலை சௌந்தரி அத்தையைப் பார்க்க வேண்டும் என்று செல்லப்பா தனக்குள் சொல்லிக் கொண்டான். நாற்பது வருஷங்

களுக்கு முன் பிரபலமாயிருந்த, இப்போது கிட்டத்தட்ட மறந்து போன சௌந்தரி அம்மாளின் நினைவு பட்டணத்துப் பொண்ணுக்குத் தோன்றுவானேன்? படுரோஷக்காரி அந்த அம்மாள் என்று அந்தப் பெண்ணிடம் எச்சரித்திருக்க வேண்டும் என்று செல்லப்பா நினைத்துக் கொண்டான். உங்க பட்டணத்துப் பெண்ணியத்தை யெல்லாம் அத்தை சாப்பிட்டு விட்டவன்னு சொல்லியிருக்கணும்.

'இந்த சௌந்தரிகிட்ட எவனும் வாலாட்ட முடியாது தெரியு மில்லே? கௌரவம் தான் பெரிசு இவளுக்கு. அதுக்காக மேடைக் கச்சேரியையே நிறுத்தினவ!' அந்தத் தெளிவும், செருக்கும், அந்த ஞானமும் இப்ப எத்தனை பேருக்கு இருக்கும்?

''என்ன அண்ணாச்சி? நிலாக் காயுதா உங்களுக்கு?''

வெயிலில் முகம் கன்னிச் சிவக்க நெற்றி வியர்வையைக் கைக்குட்டையால் துடைத்தபடி நின்றிருந்த மல்லிகாவைக் கண்டதும் ஒருகணம் துணுக்கென்றது. சௌந்தரி அத்தை இவள் வயதில் இப்படித்தான் இருந்திருப்பாள்.

''உனக்கு மட்டும் என்ன தென்றல் வீசுதா?''

''வேற வழியில்லே, சனிக்கிழமை. காலேஜ் விட்டுட்டாங்க. வீடு திரும்பறேன். லைப்ரரியிலேந்து திரும்புறீங்களாக்கும்? குடை எடுத்துப் போகக்கூடாது?''

செல்லப்பா தன் குடை புராணத்தைச் சொன்னான். மல்லிகா வாய் விட்டுச் சிரித்தாள். பிறகு கைக்கடிகாரத்தைப் பார்த்து உதட்டைக் கடித்தாள்.

''ஐயோ போறேன் அண்ணாச்சி. காலேஜை விட்டு வீடு திரும்ப கொஞ்சம் லேட்டானாலும் செந்தில் கத்துவான். அப்பாவும் அத்தையும் பேசாம இருப்பாங்க. இவன்தான் கத்துவான்.''

''ஏன்?''

''வீட்டுக்குத் தான்தான் புருஷன்னு நினைக்கிறான் போலருக்கு! அதுக்குத் தகுந்த மாதிரி அம்மாவும் ஆடுவாங்க. சரியான பேஜாரு. என்னைப் பாட்டு கிளாசுக்குக் கூடப் போக விடறதில்லே. ஒரு நாளைக்கு உங்ககிட்ட நிறைய பேசணும்....''

இதற்கு என்ன பதில் சொல்வது என்று செல்லப்பா தவித்தான்.

''நான் பாட்டுக்குப் பாட்டை முனகினா கூட அவனுக்குப் பிடிக்கிறதில்லே. நா என்ன செய்யட்டும் - எனக்கு எல்லா நேரமும் பாட்டு பாடத் தோணுது. மூச்சு விடற மாதிரி அதுவும் வருது.''

மல்லிகா சட்டென்று சிரித்தாள்.

''ஒரு நாளைக்கு வந்து ஒரு குரல் அழறேன். அண்ணி நல்லார்க்காங்களா?''

''இருப்பான்னு நினைக்கறேன். திருவாரூருக்கு அவங்க அம்மா வீட்டுக்குப் போயிருக்கா.''

''அப்ப சாப்பிட வீட்டுக்கு வாங்களேன்.''

''வேண்டாம், நா லாட்ஜுக்குப் போறேன். உங்க வீட்டுக்கு ஏற்கனவே ஒரு விருந்தாளி வந்திருக்கிற மாதிரி இருக்கு.''

மல்லிகா வியப்புடன் கண்களை மலர்த்தினாள்.

''அது யாரது?''

''தெரியாது. யாரோ மெட்ராசிலேந்த வந்திருக்கலாம்னு நினைக்கறேன்.''

''உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''சும்மா ஒரு ஊகம்தான்.''

''நல்லாருக்கு. ஆம்பளையா, பொம்பளையா?''

''பொம்பளை.''

''அப்ப உங்க ஊகம் சரியாத்தான் இருக்கும்.''

மல்லிகா பக்கென்று சிரித்து வீட்டை நோக்கி நடந்தபோது செந்தில் அவனுடைய அப்பா சபாபதியைப் போலவே சரியான மூடன் என்று செல்லப்பாவுக்குக் கோபம் வந்தது.

மீண்டும் அப்பாவின் நினைவு வந்தது. திருவாரூரில் ஒரு கல்யாணத்தில் பாட்டுக் கச்சேரி நடந்து முடிந்திருந்தது. தீட்சதர் க்ருதியின் நுணுக்கங்களை இரண்டு பேர் விவாதம் செய்து கொண்டிருந்தபோது அப்பா இடையில் புகுந்து ஏதோ சொன்னார்.

''நீ சும்மா இருடா'' என்றார் ஒருத்தர். ''நீ மேளக்காரன், உனக் கென்னடா தெரியும்? பேச வராதே.''

அப்பா வீடு திரும்பும்வரை ஒன்றுமே பேசவில்லை. இரவு மொட்டை மாடியில் பாயை விரித்து நிலாவைக் கொட்டக் கொட்ட வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தவர் அவன் பக்கம் திரும்பி, ''செல்லப்பா, நீ என் தொழிலுக்கு வரக்கூடாது'' என்றார்.

''நீ படிக்கணும். சமஸ்க்ருதம் படி. தமிழ் வேணாம்.''

பிள்ளை அறிவாளியாகணும். அது கனவு இல்லை. வெறி. அவனுடைய அறிவினாலேதான் எனக்கு விமோசனம்.

* * * * *

'**வ**ந்திருக்கிறது யாராக இருக்கும்' என்று ஓட்டமும் நடையுமாக வீடு போய் சேருவதற்குள் பத்து ஊகங்கள் தோன்றி விட்டன மல்லிகாவுக்கு. எந்த ஊகமும் சுவாரஸ்யத்தை ஏற்படுத்த வில்லை. சரேலென்று கால்கள் பின்னிக் கொண்டன. யாராவது பெண் கேட்க வந்திருக்கலாம். அம்மா மிகத் தீவிரமாக இருக்கிறாள். அதற்கு மேல் செந்தில் தீவிரமாயிருப்பது எரிச்சலை ஏற்படுத்தியது. என்னை விட நாலே வயசு பெரியவன் என்னை ஆளப் பார்க்கிறான் என்று ஆத்திரம் வந்தது.

யார் வேணா பெண் கேட்டு வரட்டும். எனக்குக் கல்யாணம் வேண்டாம். எனக்குப் படிக்கணும். பாட்டு கத்துக்கணும்.

பெண் கேட்க யாரோ நிச்சயமாக வந்திருப்பதாக, அவளைப் பிடித்து மணமேடையில் உட்கார்த்தி வைக்க செந்தில் புஜத்தை தட்டிக் காத்து நிற்பதாகக் கற்பனை விரிந்தது. புசுபுசுவென்று கோபம் வந்தது. செந்தில் மனசுக்குள் என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறான்? அவன் சினிமா போறான். மெல்லிசை நிகழ்ச்சிகளுக்குப் போறான். நான் மட்டும் போகக் கூடாது. பாடக் கூடாது.

'நீ என்ன என்னைக் கட்டுப்படுத்தறது, நா பாடுவேன்'ன்னு ஒருநாள் கேட்டதுக்கு பேயைக் கண்ட மாதிரி அரண்டு போனாங்க அவனும் அம்மாவும்.

''இவளுக்குக் கல்யாணத்தைப் பண்ணி அனுப்பி வைக்கணும் முதல்லே'' என்றான். எவனோ கட்டிக்க தயாரா தெருவிலே காத்து நிற்கிற மாதிரி. ''அதுக்குப் பிறகு அவ புருஷன் பாடு.''

அம்மாவும் அன்னிக்குக் கோபத்திலே வெடிச்சா. ''அத்தையைக் கொண்டுதோ ஆத்தாளக் கொண்டுதோம்பாங்க.''

''செத்த சும்மா இரு கற்பகம்'' என்று அப்பா அபூர்வமாக அதட்டியதும்தான் அம்மா ஓய்ந்தாள். அத்தைக்கு வரும் ஆயிரத்து சொச்ச ரூபா பென்ஷனைப் பற்றி அம்மா தனது ஆங்காரத்தில் மறந்திருக்க வேண்டும்.

அத்தைக்கு இதெல்லாம் காதில் விழுந்ததா என்று மல்லிகாவுக்குத் தெரியாது. இந்த அற்பத்தனங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டவள் அத்தை என்று மட்டும் நிச்சயம் தெரியும். அவளுக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து அத்தை இந்த வீட்டின் அங்கமாக இருந்து வருபவள். சமையல், சாப்பாடு, உறவு, துறவு என்றெல்லாம் அவள் பேசிக் கேட்டதேயில்லை. சதா ரேடியோவில் பாட்டு கேட்பாள். தானே சில சமயங்களில் பாடிக் கொண்டிருப்பாள். குரல் இப்பவும் கணீர் என்று

பிசிறில்லாமல் வெளிப்படும் போது மல்லிகாவின் மனசில் பிரவாகமாக உற்சாகம் பொங்கும். ஒரு காலத்தில் அத்தை பிரபல பாடகி என்பதற்கு சுவரெல்லாம் சட்டம் போட்ட சாட்சியங்கள் இருந்தன. இருபது வருஷங்களாக வீட்டை விட்டுப் போகாமல் சாய்வு நாற்காலியில் அமர்ந்திருக்கும் நிலையிலும் அத்தை எந்த சாம்ராஜ்யத்துக்கோ சக்கரவர்த்தினி என்று தோன்றும்.

அத்தைக்குப் புருஷன் இல்லே, குழந்தை குட்டி இல்லே. 'புருஷன் இறந்துட்டாங்க' என்றாள் அம்மா. ஆனால், அத்தை நன்றாக வட்டமாகக் குங்குமம் இட்டுக் கொள்வாள். காதிலும் மூக்கிலும் இருக்கும் வைரம் நடுக்கூடத்து அழுமூஞ்சி நாற்பது வாட் வெளிச்சத்திலும் டாலடிக்கும்.

மல்லிகாவுக்குப் பனிரெண்டு வயதுதான் என்ற நினைப் பில்லாமல் ஒரு நாளைக்கு அத்தையே பளிச்சென்று சொன்னாள்.

''என்னை யாரும் கல்யாணம் கட்டல்லே கண்ணு.''

''உங்களுக்கிருந்த மேதாவித்தனத்தைக் கண்டு பயந்திருப் பாங்க ஆம்பளைங்க.''

அத்தை சிரித்தாள்.

''நானே வேண்டாம்னு இருந்துட்டேன். கல்யாணம் பண்ணிண் டாலும் பாட்டை விடமாட்டென்னேன். எவனும் இஷ்டப் படல்லே. எத்தனை ஞானம் இருந்தாலும் கௌரதை ஒண்ணும் கிடையாது, அந்தக் குலத்திலே பொறந்தா. அதிலே பிறந்த ஆண்களே குழி வெட்டிப் பொதெப்பாங்க.''

''குழி வெட்டப் பாத்தாங்களா?''

''ஆகா! பாத்தாங்க. ஆனா இந்த சௌந்தரி அதுக்கெல்லாம் மசியுவாளா?''

மல்லிகாவுக்கு இது ஏதோ ஹாஸ்யமாகப் பட்டது. அத்தைக்கும் தனக்கும் மட்டுமே தெரிந்த ரகசியம் போல் இருந்தது.

''கௌரதைங்கறதும் மனுஷங்க நினைக்கற கௌரதைங்கறதும் வேற வேற புரியுதா?''

புரிந்தது மெல்ல மெல்ல. அது புரியாததால்தான் செந்தில் அவளுடைய ஆசைகளுக்குக் குழி வெட்டப் பார்க்கிறான் என்று கோபம் வந்தது.

இப்போது வீட்டிற்குப் போவதா வேண்டாமா என்று யோசனை செய்தபடியே அவள் வீட்டின் முன் வந்து நின்றாள்.

''ரொம்ப நன்றிங்க, ரொம்ப நன்றி'' என்று உள்பக்கம் பார்த்து சொல்லிக் கொண்டே அந்தப் பெண் வெளியில் வந்து படியிறங்கினாள்.

மல்லிகாவைக் கண்டதும் ''இதுதான் என் டாட்டர்'' என்றார் அப்பா. ''பிளஸ்டூ படிக்கிறா.''

''ஓ, பாடுவாங்களா?'' என்றாள் அந்தப் பெண்.

''அதெல்லாம் ஒண்ணும் கிடையாது'' என்றார் அப்பா அவசரமாக.

''மல்லிகா உள்ளே வா'' என்று செந்தில் போட்ட அதட்டலில் அவமானத்துடன் மல்லிகா உள்ளே விரைந்தாள்.

''இந்த செந்தில் ஏன் அத்தை இப்படி கூப்பாடு போடறான்?'' என்றாள் மெல்ல.

''அதென்னவோ எனக்குத் தெரியாது. அந்தப் பொண்ணு சாதாரணமாத்தான் பேசிட்டுப் போச்சு. பாட்டுப் பாடுங்கன்னு ஆசையா கேட்டுது''

''உங்களுக்கெல்லாம் என்ன தெரியும் பத்திரிகைக்காரங்களைப் பத்தி'' என்று செந்தில் இறைந்தான்.

''ஒண்ணு கிடக்க ஒண்ணு எழுதுவாங்க.''

''அவ என்னோட சிநேகிதியோட பேத்திடா.''

''அதனாலதான் சொல்றேன், அந்த சங்காத்தமே வேண்டாம்னு.''

செந்திலின் கோபம் புரிவது போலவும் இருந்தது. நேத்து முளைச்ச பிள்ளை இப்படிப் பேசுதே என்று ஆயாசமாகவும் இருந்தது.

''டேய் செந்தில், சித்த நேரம் பேசாம இரு. அத்தையோட வயசென்ன, உன் வயசென்ன?'' என்று சபாபதி அதட்டுவதும் ஒப்புக்கு என்று தோன்றிற்று. பிள்ளைக்கு பயப்படறான் சபாபதி. நாளைக்கு நா கண்ணை மூடினதும் பிள்ளையைத் தானே நம்பணும்?

மெத்தென்று ஒரு கை புறங்கையில் பதிந்தது. செளந்தரி திரும்பிப் பார்த்தாள்.

''சிநேகிதியோட பேத்தின்னீங்களே? யாரு சிநேகிதி?'' என்று மல்லிகா கிசுகிசுத்தாள். செளந்தரி லேசாகப் புன்னகைத்தாள்.

''இன்னொரு நாளைக்குச் சொல்றேன் கண்ணு.''

முற்றத்தில் சரசரவென்று இருள் கவிய ஆரம்பித்து விட்டது. யாரோ விளக்கு ஸ்விட்சைத் தட்டினார்கள். வந்திருந்தது ரத்தினத்துடைய பேத்தி என்று இன்னமும் நம்ப முடியவில்லை செளந்தரிக்கு....

அந்தப் பெண் பேசப் பேச சடசடவென்று ஐம்பது, அறுபது வருஷங்கள் நழுவியது போலிருந்தது. ரத்தினத்துடைய வேகம், துடிப்பு, கோபம், தைரியம் எல்லாம் கண்ணெதிரில் தோன்றின.

''தெய்வத்துப் பேரைச் சொல்லி ரொம்பப் பெரிய மோசடி நடக்குது செளந்தரி.'' அப்படி அவ படபடக்கற சமயத்திலே தம்பூராவை சுருதி கூட்டற விரல் அப்படியே நிக்கும்.

''சாஸ்திரம் சம்பிரதாயம்னு சொல்லி இப்படிப் பெண்களை ஏமாத்தறது வேற எந்த நாட்டிலேயும் இல்லே செளந்தரி. முழிச்சுக்க.

நம்மை ஒட்டுமொத்தமா இந்த சமூகம் ஏமாத்துது, சுரண்டுது, வியாதியைக் கொடுக்குது, கேவலப்படுத்துது.''

அவளுக்கு மூஞ்சி சிவந்து போகும். பெரிய படிப்பு படிச்ச தாலே மாட்டிக்கிட்ட கண்ணாடி நழுவி நழுவி விழும்.

''நீ படிச்சவ ரத்தினம். நீ பேசறதை எத்தனை பேர் கேப்பாங்க?''

''நா மட்டும் பேசினா ஒண்ணும் நடக்காதுதான். எல்லாரும் சேரணும். நாம எல்லாரும் குரல் கொடுக்கணும். நாற்சந்தியிலே நின்னு போராடணும்.''

அன்னிக்குச் சிரிப்பு வந்தது.

''நாற்சந்தியிலேயா?''

''ஆமாம். நம்ம மானத்தை சந்தியிலே வெச்சாங்களே. நமக்கு ஏதாவது மரியாதை இருக்கா இந்த சமூகத்திலே. நீ இவ்வளவு பெரிய பாடகி. தனம் அவ்வளவு பெரிய நாட்டியக்காரி. கல்யாணங்களுக்கு கச்சேரிக்குக் கூப்பிடறாங்களே, உங்களுக்கு சாப்பாடு எங்கே வெச்சுப் போடறாங்க கவனிச்சியா? சவுக்கண்டியில - பந்தியிலே இல்லே.''

அவள் பேச்சுக்குப் பதில் சொல்ல முடியாது. அதுதானே இங்க வழக்கம்னு கேட்க முடியாது. அப்படிப்பட்ட அதிகாரத்தை அவங் களுக்கு யார் கொடுத்தது, சாமியாம்பா. சாமி கைங்கர்யத்துக்கு கோயில்லே ஆடு, கல்லுச் சாமிக்குப் பொட்டுக்கட்டு; அதும்பிறவு எந்த ஆம்பளையும் உன்னை பெண்டாளலாம்னு சொன்னதும் சாமியாம்பா.

''இவங்க சதியிலே ஏகப் பெண்கள் விழுந்தாச்சு. அவங்களும் சீரழிஞ்சு எல்லார் பேரையும் கெடுத்தாச்சு. இது தொடரக் கூடாது சௌந்தரி.''

அவ பேச்சுக்கு ஏதோ சக்தி இருந்தது. மந்திரத்துக்குக் கட்டுப்பட்ட மாதிரி எத்தனை பெண்கள் வந்தாங்க. ஒரு சுதந்திரப் போராட்டத்துக்கு தயாரான மாதிரி.

அப்பத்தான் தனம் நாட்டியத்தை நிறுத்திப்புட்டா. என்னாலெ எல்லாம் முடிஞ்சுது. பாட்டை மட்டும் நிறுத்த முடியல்லே. ''போரட்டம்னா நிறைய தியாகங்கள் செய்யணும் சௌந்தரி.'' முடியல்லே. துக்கம் குமுறிக்கிட்டில்லே வந்தது. அதுக்குப் பதிலா விஷத்தை சாப்பிட்டு செத்துப் போகலாம்னு சொன்னதும் ரத்தினம் பதிலே பேசாம எழுந்து போனா.

கல்யாணம் செஞ்சுக்கோ. அப்புறம் பாடுன்னா, யாரோ தயாரா நிக்கிற மாதிரி.

''அத்தே, நீங்க ஏன் மேடைக் கச்சேரியை நிறுத்திட்டீங்க?'' என்றாள் மல்லிகா அருகில் அமர்ந்து.

சௌந்தரிக்குத் திடீரென்று சோர்வாக இருந்தது. பகபகவென்று அடிவயிற்றில் இத்தனை நாள் கழித்து ஒரு பரிதவிப்பு ஏற்பட்டது.

'மன்மத லீலை' சினிமாப் பாட்டுப் பாடச் சொல்றான் ஒரு போக்கிரி. என்னவோ அசிங்கமா பேசறான். கூட்டம் சிரிக்குது. ரத்தினம் சொன்னது சரியாப் போச்சுப் பாத்தியான்னு துக்கமா கோப மான்னு தெரியல்லே. கச்சேரியே வேண்டாம்னு அப்பவிட்டதுதான்.

''என்னவோ நிறுத்தினேன் போயேன்.''

''பேட்டியிலே சொல்வீங்க. எனக்கு சொல்ல மாட்டீங்க.''

''யாரு பேட்டி எடுக்கறது?'' என்று கேட்டபடியே வந்த செல்லப்பாவை ''வா வா'' என்று சௌந்தரி வரவேற்றாள். ''நா ஏன் பாட்டுக் கச்சேரியை நிறுத்திட்டேன்னு மல்லிகா கேக்கறா.''

''உங்க அத்தைக்கு எவ்வளவு ரோசம்னு உனக்குத் தெரியாது'' என்றான் செல்லப்பா.

''ஆமா, என் ரோசத்தாலே யாருக்கு லாபம்? ரத்னத்தோட ரோசத்தைச் சொல்லு.''

''ரத்னத்தோட ஞாபகம் எப்படி வந்தது இன்னிக்கு?''

''அவ பேத்தி வந்திருந்தா என்னை பேட்டி காண.''

செல்லப்பாவின் கண்கள் விரிந்தன.

''அட ரத்தினத்தோட பேத்தியா அது? என்ன கேட்டா?''

''அந்தக் காலத்திலே எப்படி இருந்ததுன்னு கேட்டா. என் சினேகிதி பேத்திக்கிட்ட பேசறதுக்கு என்ன தயக்கம்? அதுக்குத் தான் இந்த செந்தில் குய்யோ முறையோன்னு கத்தறான். பூகம்பம் வெடிச்ச மாதிரி.''

செல்லப்பா சற்று நேரத்திற்குப் பிறகு யோசனையுடன் எழுந்தான். நாற்சந்தியைக் கடக்கும்போது ரத்தினமும் அவள் திரட்டிய கூட்டமும் கோஷம் எழுப்பின. அப்பாவும் ஓங்கி ஓங்கி குரல் எழுப்பினது ஆச்சரியமாக இருந்தது. அந்த கோஷத்தில் சலங்கை சத்தமும், சுருதிப் பெட்டியும் மறைந்தன. தெருவே காலியாகி விட்டது. நினைவு பூதங்களிலிருந்து விலகி எல்லாரும் குடியும் குடித்தனமுமாக வாழ்ந்தார்கள். கௌரவம் வந்து விட்டது. இனிமேல் கோஷங்கள் தேவையில்லை. பூகம்பங்கள் வெடிக்காது.

வெடித்தது, பதினைந்து நாள் கழித்து. சூறாவளி போல செந்தில் கையில் ஒரு பத்திரிகையைக் கொண்டு வந்து நடுமுற்றத்தில் விசிறி எறிந்தான்.

''போச்சு, நம்ம மானம் போச்சு. நீங்களே பாத்துக்குங்க'' என்றான் அத்தையைப் பார்த்து ஆக்ரோஷத்துடன். ''வெளியிலே இனிமே தலைகாட்ட முடியாது. மல்லிகாவுக்குக் கல்யாணம் நடக்காது....''

எல்லார் முகத்திலும் பீதி கவ்வியது. செந்தில் இதுவரை செய்யாததை செய்தான். முக்காலியில் அமர்ந்து முகத்தைக் கைகளால் பொத்திக் கொண்டு குலுங்கக் குலுங்க அழுதான். அந்த அழுகை அவனது கோபத்தை விட பயங்கரமானதாக இருந்தது.

அத்தையின் முகத்தில் கலவரம் படர்ந்தது.

''என்னடா, என்னடா எழுதியிருக்கு அப்படி?''

''ஊர் உலகத்துக்கெல்லாம் டமாரமடிச்சாச்சு உங்க குலத்தைப் பத்தி. பேட்டி குடுக்காதீங்கன்னு சொன்னேனா இல்லையா?''

பத்திரிகை நட்ட நடு முற்றத்தில் நெருப்புப் பந்தம் போல் கிடந்தது. யாரும் அதைத் தொடவே பயந்தார்கள்.

''மல்லிகா, எடுத்துப் படியேண்டி'' என்றாள் அத்தை தீனமாக.

மல்லிகாவுக்கு திகைப்பாக இருந்தது. செந்திலுடைய கூப்பாடும் அழுகையும் நம்ப முடியாததாக இருந்தது.

''குலத்தைப் பத்திப் போட்டிருக்கா?''

''ஆமாம் போட்டிருக்கு.''

''வேற ஒண்ணும் போடல்லியா?''

சீறிக் கொண்டு வந்தான் செந்தில்.

''வேற என்ன போட்டாத்தான் என்ன? இந்திரன், சந்திரன்னு புகழ்ந்தா என்ன? அது முக்கியமா?''

அத்தை பிரமித்துப் போய் அமர்ந்திருந்தாள். சபாபதி தலையைக் குனிந்தபடி இருந்தான். கற்பகம் வெளியில் கொட்ட முடியாத கோபத்தை அடக்கி வைத்தவள் போல, செந்திலின் வெளிப்பாட்டில் திருப்தி அடைந்தவளாக மூச்சு வாங்க நின்றாள்.

''நா என்னடா செய்வேன் செந்தில்?'' என்றாள் அத்தை. மெல்ல, ''விஷத்தை வேணா கொண்டு வா. சாப்பிட்டு போய் சேரறேன்.''

மல்லிகாவுக்கு தான் இதைக் கேட்டு அழுகை வந்தது.

விஷத்தை யாரும் கொண்டுவர வேண்டியிருக்கவில்லை. மறுநாள் இரவு தூக்கத்தில் 82 வயது சௌந்தரி அம்மாள் இயற்கை எய்தினாள். அப்படித்தான் வந்து பார்த்த டாக்டர் சொன்னார். பத்து நாள் கழித்து அக்காளின் அலமாரியை ஒழிக்கப் போன சபாபதியின் கையில் தூக்க மாத்திரைகள் எடுக்கப்பட்ட அடையாளத்தோடு இருந்த காகிதத் துண்டுகள் கிடைத்ததும்தான் தூக்க மாத்திரை போடும் பழக்கமில்லாத சௌந்தரியிடம் அவை எப்படி வந்தன என்று கேள்வி வந்தது.

சபாபதி வாயைத் திறக்கவில்லை. அந்தத் தையில் மல்லிகாவுக்குத் திருமணம் அமையவில்லை. பாட்டு கிளாஸ்லே சேர்த்து விடட்டுமா என்று கேட்ட செல்லப்பாவிடம், ''வேண்டாம், அந்த சங்காத்தமே வேண்டாம்'' என்றாள் மல்லிகா.

இந்தியாடுடே இலக்கிய மலர் 1995

✿